05-01-2024

**HMOP. No. 83 / 2023 ம.சா. 2 சரஸ்வதி க/பெ. மாணிக்கம்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காட்டப்படும் ஆவணமானது என் பெயரில் நிலங்கள் இருப்பதனை காட்டுவதற்கான சிட்டா ஆவணம் என்றால் எனக்கு ஆவணம் பற்றி எதுவும் தெரியாது. என் மருமகள் எதிர்மனுதாரர் மீனாளின் அக்காவின் கணவர் எந்த ஊரில் உள்ளார் என்றால் பட்டுக்கோட்டை என்று சொல்வார்கள், ஆனால் ரம்பூரணிப்பட்டிக்கு வந்து விடுவார். அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் மீனாளின் திருமணத்திற்கு பிறகு அவரது தாயாரின் வீட்டிற்கு எத்தனை முறை சென்றேன் என்றால் நான் சென்றதில்லை. எதிர்மனுதாரர் மீனாளின் அக்காவின் கணவர் அந்த வீட்டிற்கு வந்து படுத்துக்கொள்வார் என்று கூறுவதற்கு நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மீனாள் அவரது அக்காவின் கணவருடன் அவரது அப்பா வீட்டிற்கு சென்று தங்கிவிடுவார் என்றும், எதிர்மனுதாரர் மீனாள் எவ்வித காரணமும் இன்றி அழைத்து சென்று விடுவார் என்றும், எதிர்மனுதாரர் மீனாளின் செய்கை குறித்து அவரது தாயாரிடம் தெரிவித்ததாகவும் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. நான் அறிவுரை கூறவேண்டியது மனுதாரரான என் மகனுக்கு தான் , எதிர் மனுதாரருக்கு அல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீனாள் கர்ப்பமான விவரம் கூட தெரியாது என கூறியிருப்பது கொடுரமான பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீனாளுக்கு திருமணத்தின்போது அவருக்கு தகப்பன் வீட்டில் போட்ட நகைகள், சீர்வரிசை பொருட்கள் எங்கள் வீட்டில் எங்கள் வசம் உள்ளதென்றால் நகைகள் போடவில்லை, கொடுத்த பாத்திரங்கள் 3 சாக்கிலும், கட்டில், பீரோ, கிரைண்டர் , ஃபேன் ஒன்றும் உள்ளது. எதிர்மனுதாரர் மீனாளிற்கு நகைகள் போடாமலேயே திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் எந்த நகை என்று எங்களுக்கு தெரியாது, நாங்கள் கேட்கவில்லை. எதிர்மனுதாரர் மீனாள் நாங்கள் கேட்டு 60 சவரன் நகை போட்டு வந்தார், அதனை நான் சரிபார்த்தேன் என்றால் இல்லை. என் மகனான மனுதாரருக்கு திருமணத்தின் போது 3 சவரன் கழுத்து செயினும், 1 சவரன் மோதிரமும் எதிர்மனுதாரர் மீனாள் தரப்பில் செய்விக்கப்பட்டது என்றால், எவ்வளவு போடப்பட்டது என்று தெரியாது, சிறிய நகை போடப்பட்டது , அதையும் 15 நாட்களுக்குள் கழற்றிக் கொண்டு சென்றுவிட்டார். எதிர்மனுதாரர் மீனாளுக்கும், என் மகனுக்கும் போட்ட நகைகளை மோசடி செய்ய வேண்டும் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 26.11.2017 ல் எதிர்மனுதாரர் மீனாள் தரப்பிலிருந்து எங்கள் வீட்டில் தாக்குதல் நடத்தியதாக சொல்லியிருப்பது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நாங்கள் புகார் கொடுத்தது தொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணை

நடைபெற்றதா என்றால் நடந்தது. நான் கொடுத்த புகார் பொய் புகார் என்பதால் தான் இந்த புகாரின் மீது இதுநான் வரை காவல் துறையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை  என்றால் சரியல்ல. முடக்கு வாத நோய் எதனால் ஏற்படுகிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முடக்கு வாத நோய் எதனால் ஏற்படுகிறது என்று எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் மருத்துவமனையில் மருத்துவர் சொன்னதன் படி தெரிந்து கொண்டேன். இயற்கையாக ஏற்படும் நோய்க்கு கூட எதிர்மனுதாரர் மீனாள் தான் காரணம் என நான் கூறுவதிலிருந்து நான் கூறும் அனைத்தும் பொய் என்பது தெளிவாகின்றது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறு விசாரணை இல்லை.**